**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 294/2024**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ம் நாள் செவ்வாய் கிழமை PW1 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.02.2026 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | சிவகுருநாதன் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி வங்கியின் கிளை மேலாளர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

25.11.2013 கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும்

25.11.2013 முதல் பிரதிவாதியின் கடனுறுதி சீட்டு வா.சா.ஆ. 2 ஆகவும்

25.11.2013 2 ம் பிரதிவாதியின் பொறுப்புறுதி ஒப்பபந்தம் வா.சா.ஆ. 3 ஆகவும்

06.04.2016 1, 2 பிதிவாதிகள் எழுதிக் கொடுத்த உயிர்ப்பு கடிதம் அசல் வா.சா.ஆ. 4 ஆகவும்

05.05.2018 1, 2, 3 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த உயிர்ப்பு கடிதம் அசல் வா.சா.ஆ. 5 ஆகவும்

28.02.2021 1, 2 பிதிவாதிகள் எழுதிக் கொடுத்த உயிர்ப்பு கடிதம் அசல் வா.சா.ஆ. 6 ஆகவும்

21.10.2021 3 ம் பிரதிவாதியின் உத்தரவாத கடிதம் வா.சா.ஆ. 7 ஆகவும்

20.11.2021 1, 2, 3 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த உயிர்ப்பு கடிதம் அசல் வா.சா.ஆ. 8 ஆகவும்

26.09.2020 ராஜேந்திரன் இறப்பு சான்று கணிணி நகல் வா.சா.,ஆ. 9 ஆகவும்

05.11.2020 ராஜேந்திரன் வாரிசு சான்று கணிணி நகல் வா.சா.ஆ. 10 ஆகவும்

கணக்கு பேரெட்டு நகல் வா.சா.ஆ. 11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

தாவா படி தீர்வாக வேண்டுகிறேன்.